# வெற்றிடங்கள்

## இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI)

**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு**

SLSI SRI LANKA STANDARDS INSTITUTION GUARDIAN OF QUALITY

**பணிப்பாளர் (தொழில்நுட்பம்)- சிரேஷ்ட முகாமையாளர் பிரிவு (HM 1 – 3)**

## பணிப்பாளர் (தொழில்நுட்பம்) – 06 பதவிகள்

**தகைமைகள்**

**வெளிவாரி**

இலத்திரனியல், மின், பொறிமுறை, சிவில், பொருட்கள், இரசாயனம், புடவை, உற்பத்தி, தகவல் தொடர்பாடல் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் அல்லது விடயப்பரப்புக்குத் தொடர்புடைய வேறு ஏதேனும் துறையில் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் துறையில் இளமாணிப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு அது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**அல்லது**

பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், தொழில்நுட்ப விஞ்ஞானம், இரசாயனவியல், உணவு விஞ்ஞானம், புடவை, நுண்ணுயிரியல், சுற்றுச்சூழல் விஞ்ஞானம், மீன்பிடி, விவசாயம், மூலக்கூறு உயிரியல், கணக்கு, தகவல் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம், புள்ளிவிபரவியல் அல்லது விடயப்பரப்புக்குத் தொடர்புடைய வேறு ஏதேனும் துறையில் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட இளமாணிப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு அது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்புப் பட்டம் (முதுமாணி பட்டம்) அல்லது தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் நிறுவன/ பட்டய அங்கத்துவம்

**மற்றும்**

கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் முதல் பட்டத்தின் பின்னர் குறைந்தது 15 ஆண்டுகள் தொடர்புடைய அனுபவம்.

**உள்ளக கீழுள்ள (a) அல்லது (b)**

a) மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
b) பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் சிரேஷ்ட முகாமைத்துவ பிரிவில் (HM 1 – 1) பதவி ஒன்றில் குறைந்தது இரண்டு (2) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**பணிப்பாளர் (நிர்வாகம்)- சிரேஷ்ட முகாமையாளர் பிரிவு (HM 1 – 3)**

## பணிப்பாளர் (நிர்வாகம்) – பதவி 01

**தகைமைகள்**

**வெளிவாரி**

மனித வள முகாமைத்துவம், பொது நிர்வாகம், பொது முகாமைத்துவம், வர்த்தக நிர்வாகம், வர்த்தகம் அல்லது விடயப்பரப்புக்குத் தொடர்புடைய வேறு ஏதேனும் துறையில் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட இளமாணிப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு அது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்புப் பட்டம் (முதுமாணி பட்டம்) அல்லது தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் நிறுவன/ பட்டய அங்கத்துவம்

**மற்றும்**

கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றின் முதல் பட்டத்தின் பின்னர் குறைந்தது 15 ஆண்டுகள் தொடர்புடைய அனுபவம்.

**உள்ளக கீழுள்ள (a) அல்லது (b)**

a) மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
b) பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் சிரேஷ்ட முகாமைத்துவ பிரிவில் (HM 1 – 1) பதவி ஒன்றில் குறைந்தது இரண்டு (2) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**தேர்வு முறை**

கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

**மற்றது**

அனைத்து விண்ணப்பதாரர்களும்

- இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
- நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவிக்கும் உரிய பணிகளை மேற்கொள்வதற்கும் உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : **இ.ரூபா 152,500.00 – 15 x 4,100.00 - இ.ரூபா 214,000** (2025.03.25 ஆம் திகதிய 01/2025 முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின்படி மூன்று தவணைகளில் இது மேற்கொள்ளப்படும், 2025 இல்: இ.ரூபா 113,556.00, 2026 இல்: இ.ரூபா 133,028.00, 2027 இல்: 152,500.00)

**வயது** : 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**ஏனைய நன்மைகள்**

1. PED/1/2015 மற்றும் PED/1/2015(i) ஆம் இலக்க அரச நிறுவன சுற்றுநிருபத்தின்படி வாகனம் அல்லது போக்குவரத்துக் கொடுப்பனவு வழங்கப்படும்.
2. பயன்படுத்தப்படாத மருத்துவ விடுப்பை பணமாக்கல்
3. ஆயுள் காப்புறுதித் திட்டம் மற்றும் மருத்துவ காப்புறுதித் திட்டம்
4. ஒரு வரம்புக்கு உட்பட்டதாக மருத்துவ செலவுகளை மீளளித்தல்
5. பொது திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்டவாறு வருடாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு
6. தொழில்முறை சூழல் ஒன்றில் பணியாற்றும் சந்தர்ப்பம்
7. தொழில்முறை கொடுப்பனவு (01/2025 முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின்படி)
8. தொடர்பாடல் கொடுப்பனவு.

உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் முழுப் பெயர், வயது, கல்வித் தகைமைகள் மற்றும் வேறு ஏனைய தொடர்புடைய விடயங்களை குறிப்பிட்ட விண்ணப்பங்களை சான்றிதழ்களின் பிரதிகளுடன் இணைத்து 2025.10.20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், இலங்கை கட்டளைகள் நிறுவனம், இல. 17, விக்டோரியா பிளேஸ், எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அரச துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்
**இலங்கை கட்டளைகள் நிறுவனம்**
தொ.: 011 2671567 – 72
011-2019600